விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 317 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 15 செவ்வாய்க்கிழமை (01.11.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=


## வலி.வடக்கில் காணி அபகரிப்புக்கு எதிராக கவனயீர்ப்புப் போராட்டம்

### அனைவரையும் பங்குபற்றுமாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் காணி அபகரிப்புக்கு எதிராக நாளை 2 ஆம் திகதி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொள்ள யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

கட்சி பேதமின்றி இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் யாழ். பல்கலைக்கழக 11

### யாழில் நீதி அமைச்சருக்கு எதிராக

## மாவட்டச் செயலகத்துக்குள் நுழைந்த உறவுகள்



03

## வடக்கில் மழை தொடரும் வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளில் மழை தொடர்வதற்கான வாய்ப்புக் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. 11

# அரசுக்கு எதிராக நாளை போராட்டம்

### அனைவரையும் பங்குபற்றுமாறு அழைப்பு

(கொழும்பு)

**ரணில் அரசுக்கு எதிராக நாளை 2ஆம் திகதி மாபெரும் போராட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் அனைவரையும் பங்கேற்குமாறு அழைப்பு விடப்பட்டுள்ளது.**

நாளை 2ஆம் திகதி நடைபெறும் மக்கள் போராட்டத்துக்கு, தமது ஆதரவையும் வழங்கப் போவதாக இளம் சட்டத்தரணிகள் சங்கமும் சட்டத்தரணிகள் சங்கமும் அறிவித்துள்ளன.

நேற்று கொழும்பு ஆசிரியர் சங்கத் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக 11

## எரிபொருள் விலை இன்று முதல் குறையலாம்!

(கொழும்பு)

எரிபொருள் விலை சூத்திரத்திற்கு அமைவாக இன்று எரிபொருள் விலை குறைவடையலாம்.

ஒவ்வொரு மாதத்திலும் முதலாம் திகதி எரிபொருள் விலைச் சூத்திரத்திற்கு அமைவாக எரிபொருள் விலையில் மாற்றம் கொண்டு வரப்படுகின்றது. 11

### அனைவரும் ஒத்துழைத்தால் மாத்திரமே

# வடக்கில் போதையை கட்டுப்படுத்த முடியும்

### யாழில் நீதி அமைச்சர் விஜயதாஸ



(யாழ்ப்பாணம்)

- முப்படையினரால் மாத்திரம் வடக்கில் போதையைக் கட்டுப்படுத்த முடியாது.
- வடக்கில் போதைப்பொருளை கட்டுப்படுத்த அரசு பூரண ஒத்துழைப்பு வழங்கும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் ஆணொருவர் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா, கனகராயன் குளம் பகுதியில் புகையிரதத்தில் மோதிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. 11

## பாணின் விலை இன்று முதல் குறையலாம்

(கொழும்பு)

பாண் உட்பட பேக்கரி பொருட்களின் விலைகள் இன்று முதல் குறைவடைய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 11

### மட்டுவிலில் ஆலயமொன்றில்

## வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவர் மயங்கிவிழுந்து மரணம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி மட்டுவில் பகுதியிலுள்ள ஆலயமொன்றில் நேற்று திங்கட்கிழமை மதியம் வழிபாட்டில் ஈடுபட்ட நபர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

மட்டுவில் வடக்கு 11

## யாழில் தொடர்ச்சியாக மழை இயல்பு வாழ்க்கை பாதிப்பு

### அச்சுவேலியில் கூடிய மழைவீழ்ச்சி பதிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கனமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது.

இந்த அடைமழை காரணமாக வீட்டினுள் வெள்ளம் புகுந்ததனால் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# அழகு கலை நிலையங்கள் மூலம் நாட்டில் பெண்களிடையே போதை பாவனை அதிகரிப்பு

## வெளியானது அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

பெண்களிடம் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் மேலதிக ஆலோசகர் லக்மீ நிலங்க தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான பெண்கள்அழகு கலை நிலையங்களின் ஊடாக போதைப் பொருள் பயன்பாட்டில் ஈடுபடுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலை மாணவர்களிடம் போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டம் ஒன்று குளியாபிட்டியவில் நேற்று இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துரைத்த அவர், அதிகளவான பெண்களிடம் தற்போது ஐஸ்போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளது.

குறிப்பாக குருநாகல் மாவட்டத்திலேயே இந்த உயர்வு பதிவாகியுள்ளது.

ஆண்களை விடவும் பெண்களுக்கே பாதிப்பு அதிகமாகவுள்ளது.

அழகு கலை நிலையங்களின் ஊடாக இந்த பழக்கத்துக்கு பெண்கள் அடிமையாகின்றனர்.

அடிக்கடி அழகு கலை நிலையங்களுக்கு செல்லும் தங்களது பிள்ளைகள் குறித்து பெற்றோர்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் மேலதிக ஆலோசகர் லக்மீ நிலங்க தெரிவித்துள்ளார். (ம-7)

# மணிவிழா வாழ்த்துக்கள்



திருமதி
**றோஸ்மேரி ஜெயச்சந்திரன்**
SLTS-I
[ பயிற்றப்பட்ட றோமன் கத்தோலிக்கம் ]

Congratulations

**சேவை விபரம்**

| | |
|---|---|
| யா / கோப்பாய் தெற்கு றோ.க.த.க பாடசாலை | 1989.11.28 - 1991.12.31 வரை |
| யா / பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை | 1992.01.01 - 1993.12.31 வரை |
| யா / உரும்பிராய் சந்ரோதயா வித்தியாலயம் | 1994.01.01 - 1994.12.31 வரை |
| யா / கோப்பாய் தெற்கு றோ.க.த.க பாடசாலை | 1995.01.01 - 2000.12.31 வரை |
| யா / கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி | 2001.01.01 - 2003.02.09 வரை |
| யா / இருபாலை சீ.சீ.த.க பாடசாலை | 2003.02.10 - 2003.07.14 வரை |
| யா / கோப்பாய் வடக்கு றோ.க.த.க.பாடசாலை | 2003.07.15 - 2004.07.13 வரை |
| யா / கோப்பாய் மகா வித்தியாலயம் | 2004.07.14 - 2015.02.15 வரை |
| யா / கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் | 2015.02.16 - 2022.11.01 வரை |

(13312)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்**

# போதைப்பொருளுடன் இருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது

(சாவகச்சேரி)

போதைப்பொருட்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரிப் பொலிஸாரால் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி-கச்சாய் வீதிப்பகுதியில் 1100 மில்லிகிராம் கஞ்சா போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவரும்-அதேவேளை நுணாவில் மத்தி பகுதியில் 40மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். கைதான நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,30)


**அலுவலகத்திற்கு கட்டடம் தேவை**

தனியார் நிறுவனம் ஒன்றின் அலுவலகம் இயங்குவதற்கு வாடகைக்கு கட்டடம் தேவை.
கோண்டாவில் சந்தியில் இருந்து யாழ். நகர் செல்லும் பலாலி வீதி, கே.கே.எஸ் வீதி, பிறவுண் வீதி ஆகிய இடங்களுக்கு முன்னுரிமை

தொடர்பு **076 600 3303**



**பூசகர் தேவை**

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவிலுக்கு நித்திய பூசை செய்வதற்கு முன் அனுபவம் உள்ள பூசகர் தேவை.
தொடர்பு - 04.11.2022 வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.30 மணி முதல் இரவு 7.00 மணி வரை

**இல. 366,**
**காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.** (13315) **செயலாளர்.**


# மருந்துகளை ஏற்றிவந்த யாழ். போதனாவின் வாகனம் விபத்து



(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து மருந்துப் பொருட்களை ஏற்றிவந்த யாழ். போதனா வைத்தியசாலை வாகனம் நேற்று விபத்திற்குள்ளாகியது.

வீதியால் சென்ற பெண் ஒருவரை மோதி குறித்த விபத்து சம்பவித்துள்ளது. இதன்போது காயமடைந்த பெண் தல்கமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்தினை ஏற்படுத்திய சாரதியை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

# பணவீக்கம் கணிசமான அளவு குறைவடைந்துள்ளது

(கொழும்பு)

நீண்ட இடைவெளியின் பிறகு, இந்த மாதத்தில் பணவீக்கம் 3.8 சதவீதத்தால் குறைந்துள்ளதாக, சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அண்மைய அறிக்கை தெரிவித்துள்ளது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் படி, கடந்த செப்டெம்பர் மாத பணவீக்கம் 69.8 சதவீதமாக பதிவாகியிருந்ததுடன், ஒக்டோபர் மாதத்தில் அது 66 சதவீதமாக குறைந்துள்ளது.

மேலும், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின்படி, உணவுப் பணவீக்கமும் செப்டெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் ஒக்டோபர் மாதத்தில் 9.3 வீதத்தால் குறைந்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்டம்பரில் 94.9 சதவீதமாக இருந்த உணவுப் பணவீக்கம், அக்டோபரில் 85.6 சதவீதமாகக் குறைந்துள்ளது. (ம-7)

# கண்ணீர் அஞ்சலி



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன வட பிராந்திய முகாமையாளர்
திரு. **சி. சிவதரன் அவர்களின்** அன்புத் தாயார்

**அமரர்**
**சிவராமலிங்கம் மகேஸ்வரி**

அவர்கள் கடந்த 29.10.2022 சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவர்தம் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-5193)

**உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கப் பணிப்பாளர்கள், பணியாளர்கள்**

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 03.10.2022 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்
**அரியமலர் இராமநாதன்**

தோற்றம்: 13.09.1945 மறைவு: 03.10.2022

(13317)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (01.11.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**கல்லூரி வீதி,**
**மானிப்பாய்.** **077 670 5107** **குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## KPPL-2022 இறுதிப்போட்டியில்

# இந்து இளைஞர் அணியை வீழ்த்தி சம்பியனாகியது இளந்தாரகை




KPPL -2022 தொடரினுடைய இறுதிப்போட்டியில் இந்து இளைஞர் அணியினரை வீழ்த்தி சம்பியனானது தருமபுரம் இளந்தாரகை.

கிளிநொச்சி மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் ஒழுங்குபடுத்தலில் கிளி மக்கள் அமைப்பினர் நடத்திய 2022 ஆம் ஆண்டிற்கான KPPL தொடரினுடைய இறுதிப்போட்டி கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி மாவ ட்ட துடுப்பாட்ட சங்க மைதான த்தில் நடைபெற்றது.

இவ் இறுதிப்போட்டியில் பலம் பொருந்திய இரு அணிகளான தருமபுரம் இளந்தாரகை விளையாட்டுக்கழகமும் கிளிநொச்சி இந்து இளைஞர் விளையாட்டுக்கழகமும் பலப்பரீட்சை நடத்தின.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இளந்தாரகை அணியினர் துடுப்பாட்டத்தினை தேர்வு செய்து நிர்ணயிக்கப்பட்ட இருபது ஓவர்களில் 8விக்கெட்டுக்களை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இளந்தாரகை அணியின் துடுப்பாட்டத்தில் றொபட் 34(38), விக்சன் 32 (29), துசன் 29(21) ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொடுத்தனர்.

இந்து இளைஞர் அணியின் பந்து வீச்சில் அகிலன் மற்றும் பார்த்தீபன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். பதிலுக்கு 141 எனும் இலக்கு நோக்கி துடுப்பெடுத்தாடிய இந்து இளைஞர் அணியினர் இளந்தாரகை அணியினரை 16.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து வெறுமனே 62 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

இந்து இளைஞர் அணியின் துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக பார்த்தீபன் 15(24), அகிலன் 11(5), ரொஸ்கோ 11(9) ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தனர். இளந்தாரகை அணியின் பந்து வீச்சில் நிதுசன் மற்றும் சுதாகர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் நிரோசன் 2 விக்கெட்டுக்களையும் சுதன் மற்றும் ஜதுசன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினையும் வீழ்த்த 78 ஓட்டங்களால் தருமபுரம் இளந்தாரகை சம்பியனாக மகுடம் சூடிக்கொண்டது.

போட்டியின் ஆட்டநாயகனாக பந்து வீச்சில் மிகச் சிறப்பாக 3 விக்கெட்டுக்களை வீழ்த்திய நிதுசன் தெரிவானார். (6-316)



அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான 17 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான தேசிய மட்ட கபடிப் போட்டியில் கிளிநொச்சி சிவநகர் அ.த.க பாடசாலை அணி சம்பியன் கிண்ணத்தையும் கிளிநொச்சி புனித பற்றிமா றோ.க.த பாடசாலை அணி வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றின. (படம்- கனகராஜா)



திருமகள் சனசமூக நிலைய 70 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு அமரர். நல்லையா சதீஸ்குமார் ஞாபகார்த்த 23 வயது யாழ். மாவட்ட ரீதியான கரப்பந்தாட்ட போட்டியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சுற்றில் தொண்டைமனாறு கலையரசி அணி சம்பியனாகியது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2720

**தயாளன்**

நமக்கு வலிப்பது போல் தான் பிறருக்கும் வலிக்கும் என்ற எண்ணம் இருந்தாலே போதும் துரோகமும் பழி வாங்கும் எண்ணமும் மறைந்து விடும்



**கௌரி**

மகன்- அம்மா இன்டைக்கு என்ன சோறு
அம்மா- கறி சோறு
மகன்- கோழி கறியா ஆட்டுக் கறியா
அம்மா -காய்கறி



**நிறோயன்**

தோல்வி அடைந்தவன் மாற்ற வேண்டியது இலக்கை அல்ல வழிகளைத் தான்



**சரன்**

என் தோல்விக்குப் பின்னால் நான் மட்டுமே இருப்பேன் ஆனால்



என் வெற்றிக்குப் பின்னால் நான் பட்ட ஆயிரம் வலிகள் இருக்கும்

**ஜனனி**

எனக்கு வசதி வந்தா ஏழைகளுக்கு உதவி செய்வேன் என்று சாமிக்கிட்ட கேக்கிறவங்க



ஏன் ஏழைக்கே வசதி வரனும்னு கேட்க மாட்டங்கிறாங்க

**மாறன்**

வியர்வைத் துளிகளும் கண்ணீர்த் துளிகளும் உப்பாக இருக்கலாம் ஆனால் அவை தான் வாழ்க்கையை இனிப்பாக மாற்றும்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ.எம்.பி அலுவலகம் எமக்கு வேண்டாம்

# யாழ்.மாவட்ட செயலகத்தை முற்றுகையிட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்





(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்ட செயலகத்துக்கு முன்னால் கொட்டும் மழைக்கு மத்தியிலும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதை தொடர்ந்து மாவட்ட செயலகத்துக்குள் உள்நுழைந்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

இந்தியாவிலிருந்து திரும்பி வந்த இலங்கையர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதற்கான நடமாடும் சேவை நேற்று திங்கட்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

இதன்போது நீதி மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கலந்து கொண்ட நிலையில் அவரது வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.ஓ.எம்.பி வேண்டாம், சர்வதேச நீதி விசாரணையை மட்டுமே நாங்கள் கோருகிறோம், இரண்டு இலட்சம் லஞ்சம் வேண்டாம், நீதி அமைச்சரே வெளியேறு, என கோஷங்கள் எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர். (நி-6-33-104)

## பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் விழிப்புணர்வுத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை மகாஜன கல்லூரியில் போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடமாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் பியந்த வீரசூரிய தலைமையில் நேற்று திங்கட்கிழமை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் போதைப்பொருளினால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் அதில் இருந்து எவ்வாறு மீள்வது என்பது தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டன.

அத்துடன் போதைப்பொருள் பாவனை மற்றும் வியாபாரம் தொடர்பில் தகவல்கள் தெரிந்தால் பொலிஸாருக்கு அறிவிக்குமாறும் பெரும்பாலான குற்றங்கள் போதைப்பொருள் பாவனையால் செய்யப்படுவதாகவும் அதனால் போதைப் பொருளுக்கு எதிராக மாணவர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் கூறப்பட்டது.

இந் நிகழ்வில் , மத குருமார்கள், யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் விஜித குணரட்ன , பாடசாலை அதிபர் ,ஆசிரியர்களும் கலந்து கொண்டிருந்தனர். (நி-6-33-104-105)

## நாவற்குழியில் கத்திக்குத்து இளைஞன் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குழி- ஐயனார் கோவிலடிப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற கத்திக் குத்துச் சம்பவத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

பணக் கொடுக்கல்-வாங்கலில் ஏற்பட்ட தகராறு காரணமாக குறித்த கத்திக்குத்து இடம் பெற்றிருப்பதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வருகிறது.

இதன்போது ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த 25 வயதான இளைஞன் ஒருவரே மார்பில் கத்திக் குத்துக்கு இலக்கான நிலையில் யாழ்.போதனா மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.கத்திக் குத்தினை மேற்கொண்ட சந்தேக நபர் தாக்குதலை நடத்திவிட்டு தலைமறைவாகியுள்ள நிலையில் குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-30)

## இராசிபலன்

01.11.2022
ஐப்பசி 15, செவ்வாய்க்கிழமை
அட்டமி பின்னிரவு 1.31 மணிவரை
உத்தராடம் முற்பகல் 7.13 மணிவரை

திருவோணம் பின்னிரவு 5.37 மணிவரை
சுபநேரம்- 10.33-12.03 மணிவரை
இராகுகாலம் -3.03-4.33 மணிவரை

சந்திராஷ்டமம் புனர்பூசம்

வளவன்





சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம், கனவு பலிதமுண்டு.





அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.





வீட்டைச் சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், வருமானம் திருப்தி தரும்.





நீண்ட நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் இடம்பெறலாம்.





மனக்குழப்பங்கள் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.





நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காணும் நாள், உள்ளத்திலும் இல்லத்திலும் அமைதி கூடும் நாள்.





தொழில் முன்னேற்றத்திற்கு நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பாராட்டும் புகழும் கூடும் நாள், கற்பனை மிகுதியான நாள்.





சிறிய வேலையொன்றிற்காக பலமுறை அலைய நேரிடலாம், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.





ஆரோக்கியத்தில் கவனம் தேவை,திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, பணியில் சிறு மன உளைச்சல்கள் ஏற்படலாம்.




வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், சுப செய்திகள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.




ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு,நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.




அரசு தொடர்பான காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

ஒருவர் பழகும் முறை அவர் உள்ளத்தை திறந்து காட்டும் கண்ணாடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின்

# பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 16





தயங்கி நின்றால் தன்னை அவர்கள் நிறுத்தி விடுவார்கள் என்றும் தைரியமாகக் குதிரையை விட்டுக் கொண்டு உள்ளே போவதுதான் உசிதம் என்றும் அந்த வீர வாலிபன் எண்ணினான். அந்த எண்ணத்தை உடனே காரியத்தில் நிறைவேற்றினான். ஆனால் என்ன ஏமாற்றம்? குதிரை கோட்டை வாசலை அணு கியதும் வேல் பிடித்த வீரர்கள் இருவர் தங்கள் வேல்களைக் குறுக்கே நிறுத்தி வழிமறித்தார்கள்.

இன்னும் நான்கு பேர் வந்து குதிரையின் தலைக்கயிற்றைப் பிடித்துக் கொணடார்கள். அவர்களில் ஒருவன் வந்தியத்தேவனை உற்றுப் பார்த்தான். இன்னொருவன் தீவர்த்தி கொண்டுவந்து உயரத் தூக்கி முகத்துக்கு நேரே பிடித்தான்.

வல்லவரையன் முகத்தில் கோபம் கொதிக்க "இதுதான் உங்கள் ஊர் வழக்கமா? வந்த விருந்தாளி களை வாசலிலேயே தடுத்து நிறுத்துவது...?" என்றான். "நீ யார் தம்பி இவ்வளவு துடுக்காகப் பேசுகிறாய்? எந்த ஊர்? என்றான் வாசற்காவலன்."

"என் ஊரும் பேருமா கேட்கிறாய்? வாணகப்பாடி நாட்டுத் திருவல்லம் என் ஊர். என்னடைய குலத்து முன்னோர்களின் பெயர்களை ஒரு காலத்தில் உங்கள் நாட்டு வீரர்கள் தங்கள் மார்பில் எழுதிக் கொண்டு பெருமையடைந்தார்கள்! என் பெயர் வல்லவரையன் வந்தியத்தேவன்! தெரிந்தா?" என்றான்.

"இவ்வளவையும் சொல்வதற்கு ஒரு கட்டியக்காரனையும் கூட அழைத்து வருவது தானே?" என்றான் காவலர்களில் ஒருவன். இதைக் கேட்ட மற்றவர்கள் சிரித்தார்கள். "நீ யாராயிருந்தாலும் இனி உள்ளே போகமுடியாது! இன்றைக்கு வரவேண்டிய விருந்தாளிகள் எல்லாம் வந்தாகி விட்டது. இனிமேல் யாரையும் விட வேண்டாம் என்று எஜமானின் கட்டளை!" என்றான் காவலர் தலைவன்.

ஏதோ வாக்குவாதம் நடக்கிறதைப் பார்த்துக் கோட்டைக்குள்ளே சற்றுத் தூரத்தில் நின்ற சில வீரர்கள் அருகில் வந்தார்கள். அவர்களில் ஒருவன், "அடே! நாம் அங்கே திருவிழாக் கூட்டத்தில் விரட்டியடித்தோமே, அந்தக் குருதை போல இருக்கிறதடா!" என்றான்.

இன்னொருவன் "கழுதை என்று சொல்லடா" என்றான். "கழுதை மேல் உட்கார்ந்திருக்கிறவன் என்ன விறைப்பாக உட்கார்ந்திருக்கிறான் பாரடா!" என்றான் மற்றொருவன். வல்லவரையன் காதில் இந்தச் சொற்கள் விழுந்தன.

அவன் மனதிற்குள், "என்னத்திற்கு வீண் வம்பு? திரும்பிப் போய் விடலாமா? அல்லது இளவரசர் ஆதித்த கரிகாலரின் முத்திரை பதித்த இலச்சினையை இவர்களிடம் காட்டி விட்டு உள்ளே போகலாமா?" என்ற யோசனை தோன்றி இருந்தது. வடதிசைப் படையின் மாதண்ட நாயகராகிய இளவரசரின் இலச்சினையைப் பார்த்துவிட்டுத் தன்னைத் தடுக்கக்கூடியவர்கள் வடபெண்ணையிலிருந்து குமரிமுனை வரையில் யாரும் கிடையாது அல்லவா? இப்படி அவன் மனத்திற்குள் விவாதித்துக் கொண்டிருந்தபோதுதான் பழுவேட்டரையர் ஆட்களின் கேலிப் பேச்சு அவன் காதில் விழுந்தது. உடனே என்ன செய்ய வேண்டும் என்பதை முடிவு செய்து கொண்டான்.

"குதிரையை விடுங்கள், திரும்பிப் போகிறேன்!" என்றான். தடுத்த வீரர்கள் குதிரையின் முகக்கயிற்றை விட்டார்கள்.

குதிரையின் அடிவயிற்றில் வந்தியத்தேவன் தன் இரு கால்களினாலும் ஒரு அழுத்து அழுத்தினான். அதே நேரத்தில் உடைவாளை உறையிலிருந்து உருவி எடுத்தான். மின்னல் ஒளியுடன் கண்ணைப் பறித்த அந்த வாள் சுழன்ற வேகத்தினால் அவனுடைய கையில் திருமாலின் சக்ராயுதத்தை வைத்துக் கொண்டு சுழற்றுவது போல் தோன்றியது.

குதிரை முன்னோக்கிக் கோட்டைக்குள்ளே பாய்ந்து சென்றது. வழியிலிருந்த வீரர்கள் திடீர் திடீரென்று கீழே விழுந்தார்கள். வேல்கள் சடசட வென்று அடித்துக் கொண்டு விழுந்தன. வம்பு பேசிய பழுவூர் வீரர்களின் பேரில் குதிரை பாய்ந்தது. இந்த மின்னல் தாக்கு தலைச் சிறிதும் எதிர்பாராத வீரர்கள் நாற்புறமும் சிதறிச் சென்றார்கள். (தொடரும்)

## சிறுவர் அரங்கம்

அம்புலிமாமா

# நீல நிறப் பூ



சிவராஜனும் தான் படித்ததை எல்லாம் கூறவே அவர்களும் "நீ என்ன படித்திருந்தாலும் இந்த ஊரில் எப்போது மழை பெய்யும் என்பதைச் சொன்னால் தான் எங்களுக்குப் பயன் உள்ளதாக இருக்கும். மழை பெய்யப் போவது பற்றி முன் கூட்டியே தெரிந்து கொண்டால் அதற்கு ஏற்ப நாங்கள் விவசாய வேலைகளைச் செய்யலாமே" என்றனர்.

இதைக் கேட்டதும் சிவராஜன் யோசனையில் ஆழ்ந்தான். தன் குரு கொடுத்த விதையிலிருந்து செடி முளைத்து அதில் நீலப் பூ பூத்தால் அதைப் பறித்து குருவிடம் கொடாமல் தானே சாப்பிட்டால் மழை பெய்யப் போவதை முன் கூட்டியே அறிந்து சொல்லலாமே என்று அவன் நினைத்தான்.

அன்று முதல் தான் விதைத்த விதை செடியாகி நீல மலர் கொடுக்க வேண்டும் என்று தினமும் கோவிலுக்குப் போய்க் கடவுளை வேண்டிக் கொண்டான். விதை முளைத்துச் செடியானதும் உரமிட்டு நீர் பாய்ச்சி அவன் அதனை அக்கறையுடன் கவனித்துக் கொண்டான். செடி மொட்டு விட்டு நீல மலரும் பூத்தது. சிவராஜனின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

அவன் உடனே அந்த மலரைப் பறித்துக் கையில் வைத்துக் கொண்டான். அதை வாயில் போட்டு மெல்லலாமா அல்லது குருவிடம் கொண்டு போய்க் கொடுத்து விடலாமா என்று ஒரு நிமிடம் யோசித்தான் அப்போது அவன் "குரு தான் பாரபட்சமாக நடந்து கொண்டாரே. அந்த ரவீந்திரனுக்குத்தானே விழுந்து விழுந்து எல்லாம் சொல்லிக் கொடுத்தார்! அப்படி இருந்தும் நீலமலர் அவனுக்குக் கிடைத்த விதையிலிருந்து கிடைக்கவில்லை. எனக்குத் தான் கிடைத்தது.

என் பிரார்த்தனை வீண் போகவில்லை. கடவுளாகப் பார்த்து இதை எனக்குக் கொடுத்திருக்கிறார். எனவே பாரபட்சம் காட்டிய குருவிற்கு இதனை தட்சணையாகக் கொடுக்காமல் நானே மென்று சாப்பிட்டு மழை வருவது பற்றி அறியும் சக்தியை அடைந்து விடுகிறேன்" என்று எண்ணினான்.

அவன் அந்தப் பூவை வாயில் போட்டு மென்றான் மறு நிமிடமே தன்னுள் ஏதோ மாறுதல் ஏற்பட்டது போல அவன் உணர்ந்தான். இன்னும் இரண்டு நாட்கள் கழித்து மழை பெய்யும் என அவனுக்குத் தோன்றவே அதை ஊராருக்குத் தெரிவித்தான்.

அவன் ஊர் பிரமுகர்களிடம் "நான் இப்போது ஒரு அரிய சக்தியைப் பெற்றுவிட்டேன். அதனால் மழை எப்போது பெய்யும் என்பதை என்னால் முன்கூட்டியே சொல்ல முடியும். நான் கூறியபடி நடக்கப் போவதைப் பாருங்கள்" என்றான். அப்போது நல்ல வெயில் அடித்துக் கொண்டிருந்தது. ஆகாயத்தில் எங்கும் மேகமே இல்லை. மேலும் அது மழைக் காலமும் அல்ல. அதனால் சிவராஜன் கூறியதை யாரும் நம்ப வில்லை. (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்)

**எந்தெந்த நாடுகளிடம் அணு ஆயுதங்கள் உள்ளன?**

உலகில் தற்போது ஒன்பது நாடுகளிடம் அணு ஆயுதங்கள் உள்ளன. இந்த நாடுகள் அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ், சீனா, இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல் மற்றும் வடகொரியா.

**அவர்களிடம் உள்ள அணு ஆயுதங்களின் எண்ணிக்கை எத்தனை?**

அணு ஆயுதங்களைப் பற்றி எந்த நாடும் வெளிப்படையாகக் கூறவில்லை என்றாலும், அணு ஆயுத நாடுகளின் இராணுவத்திடம் 9,000க்கும் மேற்பட்ட அணு ஆயுதங்கள் இருப்பதாக நம்பப்படுகிறது.

சுவீடனை தளமாகக் கொண்ட "ஸ்டாக்ஹோம் இன்டர்நேஷனல் பீஸ் ரிசர்ச் இன்ஸ்டிடியூட்" என்ற சிந்தனைக் குழு கடந்த ஆண்டு வெளியிட்ட ஓர் அறிக்கையில், 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்த ஒன்பது நாடுகளிடம் சுமார் 13,400 அணு ஆயுதங்கள் இருந்தன என்றும் அவற்றில் 3,720 ஆயுதங்கள் படைகளுடன் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கிறது.

இந்த ஆயுதங்களில் சுமார் 1,800 அதிக உஷார் நிலையில் உள்ளன. அதாவது, அவற்றை குறுகிய நேரத்தில் பயன்படுத்த முடியும் என்று SIPRI கூறுகிறது. இந்த ஆயுதங்களில் பெரும்பாலானவை அமெரிக்கா மற்றும் ரஷ்யாவிடம் உள்ளன. 2020ஆம் ஆண்டுக்குள் அமெரிக்காவிடம் 5,800 அணு ஆயுதங்களும் ரஷ்யாவிடம் 6,375 அணு ஆயுதங்களும் இருக்கும் என்று அது மேலும் தெரிவிக்கிறது.

**இந்தியாவிடம் எத்தனை அணு ஆயுதங்கள் உள்ளன?**

அணு ஆயுதங்களைப் பொறுத்தவரை இந்தியாவின் அண்டை நாடுகளான சீனாவும் பாகிஸ்தானும் இந்தியாவை விடக் கூடுதலாக வைத்திருக்கின்றன என்று SIPRI அறிக்கை தெரிவிக்கிறது. 2021 இல் இந்தியாவிடம் 150 அணு ஆயுதங்களும் பாகிஸ்தானிடம் 160 அணு ஆயுதங்களும் சீனாவிடம் 320 அணு ஆயுதங்களும் இருந்தன என்று அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

**இந்த ஒன்பது நாடுகளிடம் மட்டும் ஏன் அணு ஆயுதங்கள் உள்ளன?**

அணு ஆயுதங்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த 1970ஆம் ஆண்டில், அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் அதாவது NPT எனப்படும் ஓர் ஒப்பந்தம், 190 நாடுகளுக்கு இடையே அமுலுக்கு வந்தது.



அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் சீனாவும் இதில் அடங்கும். ஆனால், இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல் ஆகிய நாடுகள் இதில் கையெழுத்திடவில்லை. 2003 இல் வடகொரியா அதிலிருந்து விலகியது.

ஒப்பந்தம் நடைமுறைக்கு வருவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஆண்டான 1967 க்கு முன்பாக அணு ஆயுதங்களை சோதனை செய்த ஐந்து நாடுகள் மட்டுமே இந்த ஒப்பந்தத்தின் கீழ், அணு ஆயுத நாடுகளாக கருதப்பட்டன. அவை அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன் மற்றும் சீனா ஆகிய நாடுகளாகும்.

இந்த நாடுகள் தங்கள் ஆயுத சேகரிப்பை நிரந்தரமாக வைத்திருக்க முடியாது. அதாவது, அவற்றைக் குறைத்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று ஒப்பந்தத்தில் கூறப்பட்டது. கூடவே இந்த நாடுகளைத் தவிர மற்ற நாடுகள் அணு ஆயுதம் தயாரிக்க தடை விதிக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தத்திற்குப் பிறகு, அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் தங்கள் ஆயுதங்களின் எண்ணிக்கையைக் குறைத்தன. (தொடரும்)

# 17 பில்லியன் யூரோ மதிப்புள்ள ரஷ்ய சொத்துக்களை முடக்கியது ஐரோப்பிய ஒன்றியம்

(பிரசெல்ஸ்)

**மொஸ்கோ உக்ரைனை ஆக்கிரமித்ததில் இருந்து சுமார் 17 பில்லியன் யூரோக்கள் மதிப்புள்ள ரஷ்ய சொத்துக்களை ஐரோப்பிய ஒன்றியம் முடக்கியுள்ளது. ஐரோப்பிய ஒன்றிய நீதிபதி டிடியர் ரெய்ண்டர்ஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.**

ஐரோப்பிய ஒன்றியம் முக்கியமாக ஐந்து நாடுகளில் முடக்கப்பட்டதாக ஜூலையில் ரெய்ண்டர்ஸ் அறிவித்தார். இன்னும் சில நிறுவனங்களிலிருந்து சுமார் 13.8 பில்லியன் யூரோக்களில் இருந்து இந்த எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

இந்நிலையில் ஜேர்மனியில் 2.2 பில்லியன் யூரோக்கள் உட்பட ஏழு உறுப்பு நாடுகளில் 17 பில்லியன் யூரோக்களுக்கு மேல் இது வரை 90 பேரின் சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன. (நி)

# குஜராத்தில் தொங்கு பாலம் அறுந்ததில் பலியானோர் எண்ணிக்கை அதிகரிப்பு

(குஜராத்)

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் தொங்குபாலம் ஒன்று அறுந்து வீழ்ந்ததால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 141 ஆக அதிகரித்துள்ளது.



அத்துடன் மேலும் பலர் காணாமல் போயுள்ளனர் என அதிகாரிகள் நேற்று திங்கட்கிழமை தெரிவித்துள்ளனர்.

குஜராத்தின் மோர்பி நகரில் மச்சு ஆற்றின் மீது அமைக்கப்பட்டிருந்த சுமார் 150 வருடங்கள் பழமையான தொங்குபாலம் நேற்று முன்தினம் இரவு 6.40 மணியளவில் அறுந்து வீழ்ந்தது. 230 மீற்றர் (754 அடி) நீளமான இப்பாலம் 19 ஆம் நூற்றாண்டில் பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டதாகும். புனரமைப்பு நடவடிக்கைகளின் பின்னர் 5 நாட்களுக்கு முன்னர் இப்பாலம் மீண்டும் திறந்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இரட்டை கார் குண்டுவெடிப்பு 100 பேர் உயிரிழப்பு

(மொகாடிஸ்ஹு)

சோமாலியா தலைநகர் மொகாடிஸ்ஹுவில் நிகழ்ந்த இரட்டை கார் வெடிகுண்டு தாக்குதலில் 100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஜனாதிபதி ஹஸ ஸன் ஷேக் மொகம்மது தெரிவித்துள்ளார்.

சோமாலிய தலைநகர் மொகாடிஸ்ஹுவில் உள்ள அந்நாட்டின் கல்வி அமைச்சகத்தின் முன்பாக நேற்று முன்தினம் இந்தக் கார் வெடிகுண்டு தாக்குதல் நிகழ்ந்துள்ளது.

முதலில், ஒரு கார் வெடித்து சிதறி உள்ளது. இதில் பலர் உயிரிழந்துள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.


அவர்களை மீட்கும் பணியில் அருகில் இருந்தவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது மற்றொரு கார் வெடிகுண்டு வெடித்துள்ளது.

வெடி விபத்தை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து ஆய்வு செய்த சோமாலியா ஜனாதிபதி ஹஸ்ஸன் ஷேக் மொகம்மது பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது குழந்தைகள், பெண்கள், மாணவர்கள், தொழில் புரிபவர்கள் எனப் பலரும் இந்தத் தாக்குதலில் உயிரிழந்துள்ளதாக தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எந்தவொரு அரசியல் கட்சியும் மக்கள் நலனுக்காக செயற்படுவதில்லை

## தம்மரதன நாயக்க தேரர்



(கொழும்பு)

நாட்டிலுள்ள எந்தவொரு அரசியல் கட்சியும் பொது மக்களின் நலனுக்காக செயற்படுவதில்லை என மிஹிந்தலை ரஜமஹா விஹாராதிபதி வளவஹங்குணவேவே தம்மரதன நாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

ஆகவே பொதுமக்கள் வரவிருக்கும் தேர்தல்களில் எந்தக் கட்சிக்கும் வாக்களிக்க கூடாது எனவும் தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் வீழ்ச்சிக்கு அனைத்து தரப்பினரும் காரணம் என்பதனால் இலங்கையை ஆட்சி செய்த அரசாங்கங்கள் மீது தமக்கு நம்பிக்கை இல்லை.

பாராளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களும் ஒன்றிணைந்து இலங்கையை "ஏழை நாடு" என்று வர்த்தமானியில் அறிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல்வாதிகள் மக்களுக்கு சேவை செய்வதில் ஆர்வம் காட்டுவதில்லை எனவே உள்ளூராட்சி, மாகாண சபை அல்லது பொதுத் தேர்தல்கள் எதுவாக இருந்தாலும் மக்கள் கட்சிகளின் பேரணிகளில் கலந்து கொள்ளவோ வாக்களிக்கவோ வேண்டாம்.

மதகுருமார்கள் எந்தவொரு அரசியல்வாதிக்கும் ஆதரவளிக்கக் கூடாது என்றும் மக்கள் தேர்தலில் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்றும் தம்மரதன நாயக்க தேரர் தெரிவித்துள்ளார். (நி)

# மூடப்படும் பல கட்டுமான நிறுவனங்கள் பலர் வேலை இழக்கும் அபாயம்

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் கட்டட நிர்மாணத்துறை வீழ்ச்சியடைந்துள்ளதால் பல முக்கிய கட்டுமான நிறுவனங்கள் மூடப்படும் அபாயத்தில் உள்ளன.

மேலும் இந்தநிலை தொடருமானால் எதிர்காலத்தில் பலர் வேலை இழக்க நேரிடும் என்று பொறியாளர்கள் எச்சரித்துள்ளனர் மூலப்பொருட்களின் பாரிய விலையேற்றத்தாலும் குறித்த நிறுவனங்களின் இயந்திரங்கள் பழுதடைந்து வருவதாலும் இந்நிலை உருவாகி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் காலங்களில் இந்நிலை மேலும் மோசமாகும் பட்சத்தில் பலர் வேலை இழக்க நேரிடும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (நி)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

அகில இலங்கை சிறுகதைப் போட்டியில்
தேசிய மட்டத்தில் 1 ம் இடத்தைப் பெற்ற

சுதேந்திரராஜ்
ராகவியை

பாராட்டி வாழ்த்துவதோடு
அவர் மென்மேலும்
பல பட்டங்களை
பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
மகிழினி(அக்கா),
சித்தப்பா சித்திமார்,
சுசந்திராவேவி, சுகுணா
சுரேக்கா, ரமேஸ்,
ரணேஸ்,டிரேஸ்

முத்த விநாயகர் வீதி,
நல்லூர்.

(13311)


# சட்டவிரோத மதுபானம் பாரிய வளர்ச்சி

(கொழும்பு)

இலங்கையின் சட்ட விரோத மதுபானத் தொழில் சமீப காலங்களில் பல மடங்காக வளர்ச்சியடைந்துள்ளது.

இந்த சட்டவிரோத மதுபானங்கள் அனைத்தும் உரிமம் பெற்ற மதுபான ஆலைகளுக்குள் தயாரிக்கப்படுகின்றதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். (நி)


கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1990 ,இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>கி.பா: 35 ¾ சூரி 11 செவ் 6 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: M.D Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor M.D,MBBS<br>தொ.இ: B/13085 | பிறப்பு: 1973 கிறிஸ்தவம் R.C<br>உயரம் : 157 cm<br>தகைமை/தொழில்: O/L பாதுகாப்பு உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: நிரந்தரதொழில்<br>தொ.இ: G/10898 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 2<br>கி.பா: 22 சூரி 3 செவ் 6 இல்<br>உயரம் : 5'8"<br>தகைமை/தொழில்: MBBS வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: MBBS வைத்தியர் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/13086 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: 38 சூரி 10 செவ் 11 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/10908 |
| பிறப்பு: 1992 கிறிஸ்தவம் R.C<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: 20 ½ சூரி 10 செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: வாகனப்பெயின்ரர்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் பொருத்தம் முக்கியமில்லை<br>தொ.இ: B/13087 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 2<br>கி.பா: 26 சூரி 8 செவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: வங்கி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: G/10919 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா: 39 ¼ சூரி 11 செவ் 6 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L லண்டன்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/13088 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>கி.பா: சூரி 11 செவ் 10 இல்<br>தகைமை/தொழில்: BSc, MSc<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: G/10927 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் [illegible]
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# மக்கள் மீது அதிக வரி விதிப்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது

## நீலிக்கண்ணீர் வடிக்கும் மகிந்த



(கொழும்பு)

கடுமையான பொருளாதார அழுத்தத்திற்கு உள்ளான மக்கள் மீது அதிக வரிகளை சுமத்த வேண்டாம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கேட்டுக்கொண்டுள்ளார். மக்கள் மீது வரி அல்லது கட்டணச்சுமைகளை சுமத்துவதனை தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒடுக்கப்பட்ட மக்கள் மீது எத்தனை புதிய வரிகள் விதிக்கப்பட்டாலும் அவற்றை வசூலிப்பது இலகுவானதல்ல என தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி இவ்வாறான பிரேரணையை அரசியல் ரீதியாக ஆதரிக்க முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் உற்பத்தி செயல் முறையை ஊக்குவிப்பதன் மூலம் வருமானத்தை அதிகரிக்கலாம். அதிக வரிகளையோ கட்டணங்களையோ மக்கள் மீது சுமத்துவது நடைமுறைச் செயல் அல்ல எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (நி)

# எகிப்து செல்கிறார் ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

காலநிலை மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த வார இறுதியில் எகிப்து செல்ல உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நவம்பர் மாதம் 5 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை ஜனாதிபதி எகிப்தில் தங்கியிருப்பார் என தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியின் காலநிலை மாற்றம் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜேவர்தன மற்றும் ஜனாதிபதியின் சர்வதேச உறவுகளின் பணிப்பாளர் தினூக் கொழும்பகே ஆகியோரும் இந்த விஜயத்தில் ஜனாதிபதியுடன் இணைந்து கொள்ள உள்ளனர். (நி)

# ஹிக்கடுவையில் துப்பாக்கிச் சூடு

## இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

ஹிக்கடுவை-திராணகம பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 2 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நேற்று திங்கட்கிழமை காலை 9.30 இற்கு குறித்த துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த இருவரும் நீதிமன்ற வழக்கு ஒன்றுக்கு செல்லும் வழியில் இவ்வாறு சுடப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்டத்தை அனுபவிக்காமல் எந்தவொரு மனித ரும் அவரது இலட்சியத்தை அடைய முடியாது.
– காமராஜர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஏறிய விலையை இறக்குவதற்கு நுகர்வோர் அமைப்புகள் தேவை

நாட்டில் தர்மம் எங்கும் இல்லை என்றா யிற்று. யாரை அழித்தேனும் நானும் என் குடும்பமும் வாழ்ந்தால் அதுபோதும் என்று நினைக்கின்ற மனநிலையில் அறம் பற்றிய சிந்தனை அறவே இல்லாதுபோயிற்று.

ஆம், கடவுளுக்குச் சமமாக மதிக்கப்படு கின்ற மருத்துவர்கள் இன்று போதைவஸ்து வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பதான செய்திகள் இதயத்தைக் கருக்கவல்லன.

ஒரு சில மருத்துவர்களின் இத்துரோகத் தனம் ஒட்டுமொத்த மருத்துவர்களுக்கும் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது.

இதுபோல அனைத்துத் தொழில் துறை களிலும் அதர்மம் மேலெழுந்து ஆடுகிறது.

ஆசிரியத் தொழிலை எடுத்தால் தனியார் கல்வி என்பதற்கு அப்பால், மாணவர்களிடம் இருந்து பணத்தைக் கறப்பதற்காகச் சிலர் கையாளுகின்ற தந்திரோபாயங்களைப் பார்க் கும்போது தலைவிறைக்கிறது.

ஆசிரியத்துவம் புனிதமானது. என் ஆசான் என்று கூறி மாணவர்கள் பெருமைப்படக் கூடிய ஆசிரியத்துவம் இன்று பணம் ஈட்டும் தொழில் முயற்சியாக மாறியபோது மாணவர் களின் மனநிலைகளும் மாறவே செய்கின்றன.

இதைக்கூறும்போதுதான் வர்த்தகம் எவ் வாறாக இருக்கிறது என்ற கேள்வி எழுகி றது.

ஆம், சமகாலத்து வர்த்தகத்துறையின் அடிக்கட்டுப் பசளை என்பதே பொய்யும் புரட் டும் நேர்மையீனமுமாக இருக்கையில் ஒட்டு மொத்த அதர்மமும் வர்த்தகத்தில் அடக்கம் என்று சொல்வதில் தவறில்லை.

அதிலும் சில வர்த்தகர்கள் நேர்மையாக – கடவுளுக்கு நீதியாக நடக்க வேண்டும் என நினைத்துச் செயற்பட்டால், அவர்களை வாழத் தெரியாதவர்கள் என்று விமர்சனம் செய்து அவர்களையும் அதர்மம் எனும் இருளுக் குள் இழுத்துவிழுத்தி விடுகின்றனர்.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் சிந்திக்க வேண்டும்.

அதாவது விலையேற்றம் செய்வதில் அதீத கருசனை காட்டுகின்ற வர்த்தகர்கள் விலைக்குறைப்பு ஏற்படக்கூடிய சந்தர்ப்பங் களில் அதுபற்றி இம்மியும் கருசனையற்ற வர்களாக இருக்கின்றனர்.

பொதுவில் ஏறிய விலைகள் இறங்கு கின்ற பண்பாடு நம் வர்த்தகத்துறையில் இல்லை என்பது அனைவரும் அறிந்த உண்மை.

ஆனால் அண்மையில் நாட்டின் பொருளா தார நெருக்கடி காரணமாகப் பொருட்களின் விலை பல மடங்கு அதிகரித்தது.

இஃது பொதுமக்களைக் கடுமையாகப் பாதித்து வருகிறது.

அதிலும் குறிப்பாக, நாளாந்த சீவனோ பாயத்தில் இந்த விலையேற்றம் பெரும் தாக் கத்தை ஏற்படுத்திவிட்டது.

ஆகையால் விலைக்குறைப்பு ஏற்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வர்த்தகர்கள் பொருட்களின் விற்பனை விலையைக் குறைப் புச் செய்வதில் கருசனை காட்ட வேண்டும்.

இதனை கண்காணிக்கும் வகையில் நுகர் வோர் அமைப்புகள் ஊர்தோறும் உருவாக்கப் படுவது காலத்தின் அவசர தேவையாகவுள் ளது.

## 21 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தில் கையெழுத்திட்டார் சபாநாயகர் மஹிந்த யாப்பா

(கொழும்பு)

21 ஆவது அரசியல மைப்பு திருத்தச்சட்டத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று திங்கட்கிழமை காலை கையொப்பமிட் டுள்ளார்.

இதன்படி, சபாநாயக ரின் கையொப்பம் இடப் பட்ட தருணத்திலிருந்து 21 ஆவது அரசியலமை ப்பு திருத்தம் அமுலுக்கு வரும் என அறிவிக்கப்பட் டுள்ளது.

22 ஆவது அரசியல மைப்பு திருத்தச் சட்ட மூலம், திருத்தங்களுடன் மூன்றில் இரண்டு பெரும் பான்மையால் அண்மை யில் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

சட்டமூலத்தின் மூன் றாம் வாசிப்பு மீதான வாக் கெடுப்பில் சட்டமூலத்தி ற்கு ஆதரவாக 174 வாக் குகள் செலுத்தப்பட்ட நிலையில், எதிராக ஒரு வாக்கும் செலுத்தப்பட்டி ருந்தது.

இந்தத் திருத்தச் சட்ட மூலம் 22 ஆவது அரசிய லமைப்பு திருத்தமாக பாராளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்ட போதிலும், அது 21 ஆம் திருத்தமாக அரசியலமைப்பில் சேர்க் கப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

இதற்கமைய அரசியல மைப்புக்கான 22ஆம் திருத்தச் சட்டமூலம், 21 ஆம் அரசியலமைப்புத் திருத்தமாக நேற்று முதல் அமுலுக்கு வருகிறது. (நி)

## சந்தோசம் இல்லம் திறப்பு விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி விசேட தேவைகளுக்குட்பட்டோர் வலையமைப்பின் ஏற் பாட்டில் "சந்தோசம் இல் லம்" ஆண்கள் மனநல காப்பக திறப்பு விழா இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணிக்கு கிளி நொச்சி இரத்தினபுரத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் மருத்துவர் என். சரவணபவன் கலந்து கொள்வார். (6-271)

## மூன்று மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பகுதிகளில் பெய்து வரும் கடும் மழை காரணமாக மூன்று மாவட்டங்களில் மண்சரிவு அபாயம் ஏற் பட்டுள்ளதாக தேசிய கட் டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கேகாலை, இரத்தின புரி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் இந்த அபாயம் நிலவுவ தாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும், இந்த அபாய மாவட்டங்களில் வசிப்ப வர்கள் மலைகள், சரிவு கள் மற்றும் மண்சரிவு அபாயமுள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் கவனமாக இருக்க வேண்டும் என் றும் கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள் ளது. (நி)

## டயானா கமகே வெளிநாட்டவர் அம்பலப்படுத்திய முன்னாள் அமைச்சர்

(கொழும்பு)

சுற்றுலா இராஜாங்க அமைச்சர் டயானா கமகே இரட்டைக் குடியு ரிமை பெற்றவர் அல்ல என்றும் அவர் வெளி நாட்டவர் என்றும் பாரா ளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரி வித்துள்ளார்.

இரட்டைக்குடியுரிமை பெற்றிருப்பதைவிட வெளிநாட்டவர் பாராளு மன்றத்தில் இருப்பது மிக வும் ஆபத்தானது என அவர் தெரிவித்துள்ளார். பாராளுமன்ற உறுப்பி னர்களின் இரட்டைக் குடி யுரிமை தொடர்பான விசாரணைகளை குடி வரவு குடியகல்வு திணைக்களம் மேற் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்களுக்கு வேலை வழங்குவதை துரிதப்படுத்துங்கள்

### பிரதமரிடம் செல்வம் எம்.பி கோரிக்கை

(கொழும்பு)

வெளிநாட்டுப் பல்க லைக்கழகங்களில் பட் டம் பெற்ற இளங்கலை பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகளை வழங்க துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாரா ளுமன்ற உறுப்பினர் செல் வம் அடைக்கலநாதன் பிரதமர் தினேஸ் குண வர்த்தன விடம் கோரி க்கை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர் பாக நேற்று (திங்கட்கி ழமை) அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத் துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகை யில், வெளிநாட்டுப் பல் கலைக்கழகங்களில் பட் டம் பெற்ற இளங்கலை பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கு மாறு நான் பலமுறை பாராளுமன்றத்தில் பேசி யுள்ளேன். இது கடந்த காலத்தில் நடைமுறை ப்படுத்தப்படவில்லை.

மேற்குறிப்பிட்ட விட யத்தில் எடுக்கப்பட்ட சாத கமான முடிவு அனைவ ராலும் வரவேற்கத்தக் கது மற்றும் பாராட்டுக்குரி யது. இந்த முடிவு இளை ஞர்கள் மத்தியில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தி யுள்ளது.

இத்தருணத்தில் இந்த தீர்வை நான் சரி யானதாகவே பார்க்கி றேன். இந்த முடிவை உடனடியாக அமுல்படுத் துமாறு கேட்டுக்கொள்கி றேன் என குறித்த கடி தத்தில் மேலும் குறிப்பி டப்பட்டுள்ளது. (ம-7)

## தொற்றா நோய்களால் உயிரிழப்போர் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் 83 வீதமான மரணங்கள் தொற்றா நோய்களினால் ஏற்படு வதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், புற்றுநோய் போன்ற நோய்களினால் உயிரிழப்பதாக தொற்றா நோய் பிரிவின் விசேட மருத்துவ நிபுணர் சாந்த குணவர்தன தெரிவித் தார்.

நாளொன்றுக்கு 5 கிராம் உப்பு மாத்திரமே தேவைப்படுகின்ற போதி லும் அநேகமானோர் அதிகளவான உப்பை உணவில் சேர்ப்பதாக வும் அவர் குறிப்பிட் டார். (நி)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையின் 53 ஆவது ஆண்டு விழாவை முன் னிட்டு இலங்கை மின்சார சபை வடமாகாண ஊழி யர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கத் தினால் இரத்ததான முகாம் இன்று 1 ஆம் திகதி யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதி இல ங்கை மின்சார சபை பிர திப் பொதுமுகாமையாளர் அலுவலகத்தில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை நடைபெற வுள்ளது. (4)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2022**

"மரங்களை நாட்டுவதற்கான மிகச்சிறந்த காலம் இருபது வருடங்களுக்கு முன்னர் இருந்தது. அடுத்த சிறந்த காலம் இப்போது" – சீனப் பழமொழி

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற் றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்க ளின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக நாளை புதன் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** மறக் கறம்பளை-கணேச புரம்,சமயபுரம், கப்பாச்சி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணையே எமக்கு வேண்டும்

## மன்னாரில் உறவுகள் போராட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து நேற்று திங்கட்கிழமை மன்னாரில் உள்ள காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் முன் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.



வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் இடம்பெற்றது. (நி-6-285)

# அரசியல் தீர்வு கோரி கிளி.யில் கவனயீர்ப்பு



(தருமபுரம்)

மக்கள் அரசியல் தீர்வுடன் கூடிய சுய கௌரவத்துடன் வாழ வேண்டும் என வலியுறுத்தி கிளிநொச்சியில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு கிழக்கு மக்கள் அரசியல் தீர்வுடன் கூடிய சுய கௌரவத்துடன் வாழ வேண்டும் என வலியுறுத்தி வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு 100 நாள் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்து வருகிறது.

அந்த வகையில் 100 நாள் போராட்டத்தை வலியுறுத்தி 92 ஆவது நாளான நேற்று கிளிநொச்சி பூநகரி வாடியடி சந்தியில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நில அபகரிப்பு ,தொல்லியல் என்ற பெயரில் வனஇலாகா காணிகளை சுவீகரிப்பு போன்ற விடயங்களை நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி குறித்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (நி-6-316)

## விசுவமடுப் பகுதியில்

# வெட்டுக்காயங்களுடன் இளைஞன் மீட்பு



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட விசுவமடு பகுதியில் இயங்கி வரும் இலங்கை வங்கியின் கிளை காரியாலயத்தின் மேல் மாடி பகுதியில் நேற்று வெட்டுக்காயங்களுடன் இளைஞன் இனங்காணப்பட்டார்.

அவருக்கு அருகில் பிளேற், கையடக்க தொலைபேசி என்பன காணப்பட்டன. குறித்த இளைஞன் மக்களின் உதவியுடன் தருமபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு அதன்பின் யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

காயமடைந்தவர் கோப்பாய் பகுதியைச் சேர்ந்த கணேசன் விஜிதரன் வயது 30 என அவரது சாரதி அனுமதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-6-316)

# வவுனியாவில் 58 ஆயிரம் ஏக்கரில் பெரும்போக நெற்செய்கை

(நெளுக்குளம்)

வவுனியா மாவட்டத்தில் 58 ஆயிரம் ஏக்கரில் பெரும்போக நெற்செய்கையானது மேற்கொள்ளப்பட்டு வருவதாக கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் விஸ்ணுதாசன் தெரிவித்துள்ளார்.

பெரும்போக நெற்செய்கை தொடர்பாக தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

பெரும்போக நெற்செய்கைக்கான செயற்பாடுகள் வவுனியா மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் அடிப்படையில் 58 ஆயிரம் ஏக்கரில் இம்முறை பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

அதன் அடிப்படையில் தற்போது வரை 60 வீதமான வயல் நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மிகுதி வயல் நிலங்களில் நெற்செய்கையினை மேற்கொள்வதற்கான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை 500 மெற்றிக் தொன் பசளையினை முதற்கட்டமாக விவசாயிகளிற்கு வழங்கும் செயற்பாடுகள் கமநலசேவை நிலையங்களின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்தார். (நி-6-299)





கந்தசஷ்டி விரதத்தின் இறுதி நாளான நேற்று முன்தினம் மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்திலும் வவுனியா தாண்டிக்குளம் முருகன் ஆலயத்திலும் சூரன்போர் நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன. (படங்கள்: ஜோசப்நயன், சதீஸ், வசந்தரூபன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 400 | 300 | 400 |
| உருளைக்கிழங்கு | 230 | 210 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 250 | 240 |
| தக்காளி | 300 | 300 | 320 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 120 | 200 |
| கோவா | 350 | 250 | 320 | 300 |
| கரட் | 350 | 400 | 450 | 420 |
| பூசணி | 200 | 200 | 200 | 200 |
| புடோல் | 250 | 250 | 180 | 160 |
| வாழைக்காய் | 180 | 160 | 120 | 160 |
| சின்ன வெங்காயம் | 450 | 450 | 550 | 550 |
| பெரிய வெங்காயம் | 260 | 260 | 250 | 280 |
| பாகற்காய் | 650 | 600 | 600 | 800 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 120 | 240 |
| கருணைக் கிழங்கு | 180 | 140 | 160 | 200 |
| பயற்றங்காய் | 600 | 700 | 600 | 400 |
| லீக்ஸ் | 350 | 300 | 280 | 350 |
| பீற்றூட் | 280 | 250 | 250 | 280 |
| கறிமிளகாய் | 550 | 750 | 750 | 700 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 400 | 500 |
| போஞ்சி | 400 | 450 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 200 | 250 | — | 350 |
| கீரை - 1 பிடி | 180 | 120 | 160 | 150 |
| தேசிக்காய் | 600 | 650 | 650 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 65 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 250 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 350 | — |
| முள்ளங்கி | 160 | 160 | 160 | 240 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 30 | 20 | 40 | 50 |
| ஈரப்பலா | 120 | 140 | 120 | 120 |

# உலக உணவு விவசாய நிறுவனத்தால் வழங்கப்படும் இழப்பீடு கிடைக்கவில்லை

## கிளிநொச்சி விவசாயிகள் கவலை

(தருமபுரம்)

உலக உணவு விவசாய நிறுவனத்தினால் வழங்கப்படும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான தொகை கிடைக்கவில்லை என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளனத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே விவசாயிகள் குறித்த விடயத்தினை தெரிவித்தனர்.

இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளன செயலாளர் முத்து சிவமோகன் கருத்து தெரிவிக்கையில், உலக உணவு விவசாய நிறுவனத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு அந்தர் அசேதன உரமும் பதினையாயிரம் ரூபாய் நிதி வடமாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டம் தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களில் வழங்கப்பட்ட நிலையில் உரிய நிறுவனத்திடம் கேட்ட போது கிளிநொச்சி மாவட்ட செயலக தரவுகளின் படி விவசாயிகள் ஆரோக்கியமான நிலையில் உள்ளதாகவும் கடந்த போகத்தில் அதிக விளைச்சலை பெற்றிருந்ததாக தகவல் தரப்பட்ட நிலையிலே குறித்த தொகை மாவட்டத்திற்கு நிறுத்தப்பட்டதாக தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வயல்நிலங்கள் உள்ளதுடன் 23 ஆயிரம் விவசாய குடும்பங்களும் உள்ளன.

குறித்த உதவி இன்மையால் மிக வறுமை நிலையிலுள்ள விவசாய குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

குறித்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தீர்வு பெற்றுத் தர வேண்டும் என தெரிவித்தார். (நி-6-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிபாட்டில் ஈடு...

சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த 52 வயதான தர்மலிங்கம் கேசவநாதன் என்பவரே இவ்வாறு ஆலயத்தில் மயங்கி விழுந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,30)

## எரிபொருள்...

இந்த நிலையில் இன்று எரிபொருள் விலை குறைவடையும் என்ற எதிர்பார்ப்பில், எரிபொருளுக்கான முன்பதிவுகள் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறுதியாக 92 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் விலையானது 40 ரூபாயால் குறைக்கப்பட்டு தற்போது 370 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது.

டீசல் ஒரு லீற்றர் 15 ரூபாயினால் குறைக்கப்பட்டு தற்போது 415 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வடக்கில் மழை...

இலங்கையை அண்மித்த தாழ்வான வளிமண்டலத்தின் கொந்தளிப்பான தன்மை தொடர்ந்தும் நீடிப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக இன்று செவ்வாய்க்கிழமை வடக்கு, வடமேற்கு, மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதுமட்டுமன்றி, நாட்டின் பல பகுதிகளில் மாலை அல்லது இரவு வேளையில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-7)

## வவுனியாவில்...

யாழில் இருந்து நேற்றுக் காலை கொழும்பு நோக்கிச் சென்ற புகையிரதம் கனகராயன்குளம் பகுதியில் பயணித்தபோது புகையிரதப் பாதையில் ஆண் ஒருவருடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்து இடம்பெற்ற நிலையில் தலை, கைகள், கால்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் குறித்த ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உடனடியாக புகையிரதத் திணைக்களத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து சடலத்தை மீட்டு கனகராயன்குளம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

மீட்கப்பட்ட ஆண் புகையிரதத்துடன் மோதி வித்துக்குள்ளானதால் மரணமடைந்தாரா? அல்லது ஏற்கனவே தாக்கப்பட்டு புகையிரதப் பாதையில் போடப்பட்டுள்ளாரா? என்ற அடிப்படையில் கனகராயன்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,250)

## பாணின் விலை...

தேநீர் மற்றும் பாண் உள்ளிட்ட மேலும் சில உணவு வகைகளின் விலையை 10 சதவீதத்தால் குறைப்பதற்கு எதிர்பார்ப்பதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனினும், இதற்காக அத்தியாவசிய உணவுப் பொருட்கள், குறைவடைந்துள்ள புதிய விலையில் உணவக உரிமையாளர்களுக்கு கிடைக்கப் பெற வேண்டும் என அந்தச் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

அதேபோன்று கடந்த காலங்களில் அதிகரித்து காணப்பட்ட கோழி இறைச்சி மற்றும் மீன் என்பவற்றின் விலையும் வீழ்ச்சியடைந்துள்ளன.

மொத்த சந்தையில் குறைவடைந்துள்ள விலைக்கு அமைய கிராமங்களில் உள்ள வர்த்தக நிலையங்களிலும் பொருட்களின் விலையை குறைப்பதற்கான செயற்பாடு முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார். (ம-7)

## வலி.வடக்கில்...

மாணவர் ஒன்றியம் கேட்டுக் கொண்டுள்ளது. வலி.வடக்கு காணி சுவீகரிப்பிற்கெதிராக கவனயீர்ப்பு போராட்டமொன்றினை மேற்கொள்வது தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஊடகச் சந்திப்பொன்றை நேற்று நடத்தியிருந்தது.

இதன்போது கருத்துத் தெரிவித்த மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் எமது மக்களுக்காகவும் உரிமைகளுக்காகவும் இனத்திற்காகவும் போராட்டம் ஒன்றிற்கான அழைப்பினை இதன்போது விடுக்கின்றோம். கடந்த மாதம் காணி சுவீகரிப்பு தொடர்பாக காணி அமைச்சின் மேலதிக செயலாளர் தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

குறிப்பாக வடகிழக்கில் காணி சுவீகரிப்புக்கள் தொடர்ச்சியாக இடம்பெற்ற வண்ணமே உள்ளது.

இது தடுத்து நிறுத்தப்படவேண்டும். அந்தவகையில் வலி.வடக்கு காணிகளை விடுவிக்க வலியுறுத்தி நாளை 2ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணியளவில் எமது யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆகவே தமிழர்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து பயணித்துக் கொண்டிருக்கக்கூடிய மதகுருமார், சிவில் அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் என அனைத்து தரப்பினரையும் கட்சி பேதமின்றி பங்கெடுக்குமாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

இவ் ஊடக சந்திப்பில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் அ.விஜயகுமார், யாழ்.பல்கலைக்கழகமாணவர்ஒன்றியச் செயலாளர் எஸ்.றாபின், யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் சி.ஜெல்சின் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ம-7,18,33,104)

## அரசு...

சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைவரையும் நவம்பர் 02 மருதானை எல். பின்ஷ்டன் முன்பாக திரளுமாறு அழைப்பு விடுக்கின்றோம். நாட்டில் பசி பட்டினி வறுமை தலை விரித்து ஆடுகிறது. பொலிஸார் ராஜபக்ஷ குடும்பத்தாருக்கு ஊழியம் செய்கிறார்கள்.

பொலிஸ் அராஜகம் மேல் ஓங்கி செல்கிறது. ரணில் ஆட்சிக்கு வந்து நாட்டு மக்களையும் நாட்டையும் பற்றி கவலைப்படாமல் கோட்டாவை எப்படிக் காப்பாற்றலாம், மகிந்தவுக்கு எவ்வாறு மறுவாழ்வு கொடுக்கலாம், வசந்த முதலிகே, ஸ்ரீதம்ப தேரர் போன்றோரை எவ்வாறு அடக்கலாம் சிறையில் வைக்கலாம் என்ற சிந்தனையில் மட்டும் மூழ்கியிருக்கிறார்.

மக்களின் பசியை எவ்வாறு போக்கலாம் என்ற சிந்தனை சிறு துளி கூட இல்லை. ரணில் அவர்களே நீங்கள் நினைப்பதை மட்டும் செய்ய நினைத்தால் அது ஒருபோதும் நடக்காது. நடக்க விடமாட்டோம்.ஏப்ரல் மாதத்தில் ஆரம்பித்த போராட்டம் நினைவிருக்க வேண்டும். வருகிறோம் 2ம் திகதி என்ன செய்விர்கள் என்று பார்ப்போம். மக்கள் முட்டாள்கள் அல்ல என தெரிவித்துள்ளனர். (ம-7)

## யாழில் தொடர்ச்...

யாழ்ப்பாணம் - காக்கைதீவு பகுதியில் வசித்துவரும் 3 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்தவர்கள் காக்கைதீவு மீனவர் சங்க கட்டடத்தினுள் தங்கியுள்ளனர்.

மேலும் (30.10.2022) காலை 8.30 மணி முதல் நேற்று திங்கட்கிழமை காலை 8.30 மணி வரையான 24 மணி நேரத்தில் யாழ்.மாவட்ட மழைவீழ்ச்சி நிலைவரப்படி, அச்சுவேலியில் கூடிய மழைவீழ்ச்சியாக 56.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகி உள்ளதாகத் திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார். (ம-7)

தன நிதானய
திகதி - 2022.10.31
சீட்டிழுப்பு இலக்கம் - 955
E 08 12 42 55
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

மஹஜன சம்பத
திகதி 2022/10/31
சீட்டிழுப்பு இலக்கம் 4925
P 3 1 7 0 3 8
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.10.31
சீட்டிழுப்பு இலக்கம் 234
மகரம் 04 15 28 58 மகரம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 31/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1273
C 25 03 15 37 75

கொவிசெத
திகதி 2022.10.31
சீட்டிழுப்பு இலக்கம் 3167
H 44 53 60 62
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 31/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1380
தனுசு 3 8 1 9 2 2
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1900 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2022.10.31 தினம் திங்கட்கிழமை
N 13 36 46 63
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,614,600/-

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.10.31
சீட்டிழுப்பு இல : 4061
வர்ணம் : நீலம்
ரூ. 3,439,260/-
வெற்றி இலக்கங்கள் 01 02 29 69 U

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,642,194/-
திகதி 2022-10-31
வெற்றி வாரம் 3612
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 11 26 39 57
ரூ. 8,310,340/-

வசனா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 28 06 22 34 64
சீட்டிழுப்பு வாரம் 1076
வர்ணம் இள நீலம்
திகதி 2022.10.31 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 273,655,787.80
தொலை பேசி 011-2 333 546-47
Web : www.dlb.lk

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1866
சீட்டிழுப்பு திகதி 2022-10-31
வெற்றி இலக்கங்கள் 06 22 58 65 P
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 36,683,572/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல : 1726
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2022.10.31
ரூ. 3,595,860/-
வெற்றி இலக்கங்கள் 28 47 57 58 E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

யாழ்ப்பாணத்தில் நேற்று நடமாடும் சேவையை ஆரம்பித்து வைத்தபின் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தற்போது வடக்கில் ஒரு புதிய பிரச்சனை உருவாகி வருகிறது இலங்கை முழுவதும் இந்த போதைப் பொருள் பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினையாக காணப்படுகின்றது ஆனால் வடபகுதியில் அது மிகவும் அதிகளவில் காணப்படுகிறது கடந்த 2 மாதத்திற்குள் 508 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள் எதிர்கால இளைஞர்களின் எதிர்காலத்தை பாதிக்கும் செயற்பாடு தொடர்பில் ஒரு பொறுப்பாக செயற்பட வேண்டியுள்ளது.

அந்த விடயத்தை தடுப்பதற்கு நாங்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டியதாக உள்ளது குறிப்பாக வடக்கு மாகாணத்தில் இருந்த போதைப்பொருள் பாவனை மிக அதிக அளவில் காணப்படுகின்றது கடந்த ஒரு சில மாதங்களாக போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன

அதேபோல் போதைப் பொருட்களுடன் பலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள் இது ஏனைய இடங்களோடு ஒப்பிடும் போது அதிகளவாக காணப்படுகின்றது இது ஒரு விபரீதமான ஒரு செயல்பாடாக காணப்படுகின்றது சிறுவர்களின் எதிர்காலத்தை பாழாக்கும் பாரதூரமான செயற்பாடாக்காணப்படுகிறதுஅத்தோடு இந்த விடயம் போதைப்பொருள் வியாபாரிகளால் உருவாக்கப்படுகிற செயற்பாடாக காணப்படுகின்றது அதாவது குறிப்பாக யாழ். மாவட்டம். மிகவும் ஒரு பாதிப்பான நிலையில் காணப்படுகின்றது இந்த நாட்டின் பிரஜை என்ற ரீதியில் போதைப் பொருள் பாவனைக்கு எதிராக நாங்கள் உடனடியாக ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும் குறிப்பாக முப்படையினர் பொலிஸார் அனைவரையும் இணைத்து இதனை தடுப்பதற்கான நடவடிக்கை உடனே எடுப்பதற்கு நான் தயாராக உள்ளேன்.

குறித்த பிரச்சினையினை ஆராய்வதற்காக இந்த விசேட கூட்டம் ஒன்றினை கூட்ட உள்ளேன் மக்களின் பிரதிநிதிகளையும் இந்த கூட்டத்திற்கு அழைக்க உள்ளேன் அந்தக் கூட்டத்தில் சமூகமட்ட பிரதிநிதிகள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் பலரையும் ஒன்றிணைத்து இந்த போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்துவதற்கு உபரியான செயற்பாட்டை முன்னெடுக்க முடியும் என்பது தொடர்பில் நான் ஆராயவுள்ளேன் என்றார்.

(ம-7,18,33,104)


வங்கியில்'அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13294)

076 825 7716 (ஆகாஸ்)



உ

ஓம் சக்திமயம்

யாழ்ப்பாணம் – வண்ணார்பண்ணை

**அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்**

**அறிவித்தல்**

மேற்படி ஆலயத்தின் தற்கால சூழல் என்ற கருப்பொருள் தொடர்பான ஓர் கலந்துரையாடல் நடாத்த வேண்டிய கட்டாயதேவை ஏற்பட்டுள்ளது. எனவே ஆலயத்தின் தர்மகர்த்தாக்கள், மஹோற்சவ உபயகாரர்கள், அலங்கார உற்சவ உபயகாரர்கள், ஏனைய விழா உபயகாரர்கள், சமூகப் பெரியார்கள், அம்பாளின் அடியார்கள், சமய, ஆன்மீக வல்லுனர்கள் போன்றோரை எதிர்வரும் 06.11.2022 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு மேற்படி ஆலய வளாகத்தில் ஒன்றிணைந்து தங்களின் ஆக்கபூர்வமானதும் மேலானதுமான கருத்துக்களை வழங்குமாறு அன்போடு வேண்டி நிற்கின்றோம்.

தெளிவே என் சிந்தனை

இங்ஙனம்

இராஜஸ்ரீ சிவகமல்ராஜ் குருக்கள்

முதன்மை பிரதமகுருவும் ஆதீன கர்த்தாவும் மேற்படி தேவஸ்தானம்.

(C-5191)



**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**



அன்புடையீர்!

கடந்த 04.10.2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் **ஞானசுந்தரம் உதயசங்கர் (மோகன்)**

(மோகன் சவுண்ஸ் உரிமையாளர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 01.11.2022 செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 03.11.2022 வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.26, பெரியதம்பிரான் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (13309)

இங்ஙனம்:- குடும்பத்தினர் 077 077 6234



அமெரிக்க லொத்தர் இலவச விசா

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

Passport அவசியமில்லை

55'000 விசாக்கள் இலங்கையர்களுக்கு அதிக வாய்ப்புக்கள்

இன்னும் ஆறு நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள்

ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் (C-5159)


இந்த வருடம் எழுதியவர்களும் விண்ணப்பிக்கலாம்

வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரியசந்தர்ப்பம்

எம்மூடாக விசா வென்ற வெற்றிக்கதைகளை எமது V2 Travels and Tours எமது Facebook பக்கத்தில் பார்வையிடலாம்.

V2 Travels 0768226240 0768226244


# மரண அறிவித்தல்



## குமாரசாமி கனகலிங்கம்

### (சிவராசா)

(முன்னாள் ஓய்வுபெற்ற காவல்துறை உத்தியோகத்தர்)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1947.03.24 | 2022.10.30 |

யாழ்ப்பாணம், கொட்டடியைப் பிறப்பிடமாகவும் நல்லூர் கொண்டலடியை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி கனகலிங்கம் அவர்கள் 2022.10.30 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி - சின்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற செல்லர் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சறோஜினிதேவியின் பாசமிகு கணவரும் ரவிக்காந் (K.K.R Eng Construction), அகல்யா (ஆசிரியர் - முன்னாள் கோப்பாய் மகா வித்தியாலயம்), உமாகாந் (வடமாகாண மருத்துவ பிரதிநிதி), ருக்சியா ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலரமணன் (கனடா), துஸ்யந்தினி, கௌசிகா (யாழ்.பல்கலைக்கழக மாணவி), கேதீசன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிரணவி, பிரணிகா, மாதுளன், தேனுக்காந், பிருந்தவி ஆகியோரின் அன்புப் பேரனும் மகிழ்ராசா, முத்துலட்சுமி, சிங்கராசா, காலஞ்சென்றவர்களான இரத்தினம், சின்ராசா, பொன்ராசா, குணரட்ணம், ஆகியோரின் அன்புச் சகோதரனும் தெய்வேந்திரம், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, தம்பிஐயா, துரை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2022) செவ்வாய்க்கிழமை காலை 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்

(C-5202) தொடர்பு:- உமாகாந் 077 725 3639

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.